# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

முறையீட்டு மனு எண்: 004/மா/2019
ஆணை நாள்: 8.7.2019

திரு. K. ஆறுமுகம்,
சேலையூர், சென்னை - 73. – **முறையீட்டு மனுதாரர்**

ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி. – **எதிர்மனுதாரர்**

திரு. K. ஆறுமுகம், துப்புரவு அலுவலர் (ஓய்வு), சேலையூர், தாம்பரம், சென்னை – 73 என்பவரது 24.12.2018 நாளிட்ட முறையீட்டு மனு 24.12.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனு, எண். 004/2019 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

திரு. K. ஆறுமுகம், துப்புரவு அலுவலர் (ஓய்வு), சேலையூர், தாம்பரம், சென்னை – 73 என்பவரது 24.12.2018 நாளிட்ட முறையீட்டு மனுவில் தான் திருப்பூர் நகராட்சியில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்த போது, 6வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி ஊதியம் மறுநிர்ணயம் செய்து பணி பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டது என்றும், ஆனால் நிலுவைத் தொகை வழங்கவில்லை என்றும், அந்நிலுவைத் தொகையினை வட்டியுடன் திருப்பூர் மாநகராட்சியிலிருந்து வழங்க உத்தரவிட கோரியுள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க இம்முறைமன்ற நடுவத்தின் 11.1.2019 நாளிட்ட அறிவிப்பாணையின்படி திருப்பூர் மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது.

திருப்பூர் மாநகராட்சி ஆணையர் தனது 13.2.2019 நாளிட்ட அறிக்கையில் முறையீட்டு மனுதாரர் திரு. K. ஆறுமுகம் என்பவரது 6வது ஊதியக்குழுவின் நிலுவைத் தொகை ரூ.12,891/- வருங்கால வைப்பு நிதியில் சேர்க்கப்பட்டு காசோலை எண். 332021 ல் 7.9.2009 அன்று தாம்பரம் நகராட்சிக்கு அனுப்பப்பட்டு 12.10.2009 ல் வரவாக்கப்பட்டுள்ளது என்றும், வைப்புநிதிப் பதிவேட்டின் நகல் மற்றும் ரொக்கப் பதிவேட்டின் நகல்கள் இணைத்துள்ளதாகவும், மனுதாரர் திரு. K. ஆறுமுகம், துப்புரவு ஆய்வர் (ஓய்வு) அவர்களுக்கு மேற்குறிப்பிட்ட நிலுவைத் தொகையினை வழங்க 13.2.2019 நாளிட்ட கடிதத்தில் தாம்பரம் நகராட்சி ஆணையரை கேட்டுக் கொண்டுள்ளதாகவும், மனுதாரர் திரு. K ஆறுமுகம் தனக்குரிய நிலுவைத் தொகையினை தாம்பரம் நகராட்சியில் பெற்றுக் கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. K ஆறுமுகம் ஓய்வுபெற்ற துப்புரவு ஆய்வாளருக்கு இம்மாநகராட்சியிலிருந்து வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ஏதும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை மற்றும் திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு, திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஏற்கப்பட்டது. முறையீட்டு மனுதாருக்குரிய நிலுவைத் தொகை தாம்பரம் நகராட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டுவிட்டபடியால், முறையீட்டு மனுதாரர் தனக்குரிய நிலுவைத் தொகையினை தாம்பரம் நகராட்சி ஆணையரை அணுகி பெற்றுக் கொள்ள அறிவுறுத்தியும், முறையீட்டு மனுதாரருக்குரிய நிலுவைத் தொகையினை உரிய விதிமுறைகளின்படி விரைந்து வழங்கிட தாம்பரம் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தியும் ஆணையிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரருக்கு நிலுவைத் தொகை வழங்கிய விபரத்தை அறிக்கையாக இம்முறைமன்ற நடுவத்தில் 15 தினங்களுக்குள் சமர்ப்பிக்கவும் தாம்பரம் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2019 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 8 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் (பொ).

பெறுநர்

1. திரு. K. [illegible]
98F விஜய் பிளாட், கற்பகம் நகர்,
சேலையூர், தாம்பரம்,
சென்னை – 600 073.

2. ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி, தாம்பரம்.

3. ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி, திருப்பூர்.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரி